**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண்.40 /2022 வா.சா.1**

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 10–ம் நாள் புதன்கிழமை–ன் வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: லெட்சுமணன் தந்தை பெயர்: கேசன்

---

**<u>10.06.2026.</u>**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எதிர்வழக்குரையில் கண்டுள்ள விவரங்களை படிக்க கேட்டு தெரிந்து கொண்டேன். 1ம் பிரதிவாதி விஜயா அவர்கள் வீட்டின் கதவு எண் 872 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.ஆனால் அந்த முகவரியை பிராதில் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கேசம்பட்டி கதவு எண் 406 முகவரியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி முகவரியை பிராதில் திருத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்திலும், பிரதிவாதி தரப்பில் சொல்லப்படும் கிரைய ஆவணத்திலும் உள்ள சொத்துக்கள் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. ஒரே சொத்து ஆகும்.

2. வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நான்குமால் தவறு என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் எத்தனை இலக்க சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 7 இலக்க சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் வழக்கு சொத்து எத்தனையாவது இலக்க சொத்து என்றால் தெரியாது. வா.சா.ஆ– 2 கிரைய ஆவணத்தில் வழக்கு சொத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ–1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சிங்காரபிள்ளை, நாச்சான், கேசன் ஆகியோர்கள் எப்போது இறந்தார்கள் என்று பிராதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் பெறப்படவில்லை. நாச்சான் கேசனின் சகோதரன் என்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதனால் நாச்சான் கேசனின் சகோதரர் என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. எனக்குபடிக்க தெரியாது என்று பிராதில் நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

4. கேசவனுக்கு நாச்சி, பிரம்மி இரு மனைவிகள் என்று பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதில் யாருக்கு முதல் திருமணம் நடந்தது என்று பிராதில் சொல்லாததால் நாச்சி முதல் மனைவிஇல்லை என்றால் சரியல்ல. என்னிடம்

நாச்சி முதல் மனைவி என்பதை நிரூபணம் செய்ய ஆதாரங்கள் உள்ளது. வா.சா.ஆ–1 கொடி வழி ஜாபிதாவில் உண்மை விவரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ–4 பிரதிவாதிகளின் கொடிவழி ஜாபிதாவில் சின்னையா மக்கள் சின்னையா, கேசன், அழகு வாரிசு விவரத்தில் அழகு இறப்பு என்று சொல்லப்படாததால் வா.சா.ஆ–4 ல் உண்மை விவரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிராது பத்தி 11 ல் வழக்கு சொத்தில் பிரதிவாதிகளின் தாத்தா சின்னையா எனது அப்பாவிடம் குடியிருப்பது அனுமதி கேட்டார் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தானது சின்னையாவுக்கு பாத்தியம் என்பதால் எனது அப்பாவிடம் அனுமதி கோர தேவையில்லை என்றால் சரியல்ல.

6. பிராதில் எனது தந்தை கேட்டுகொண்டதன் பெயரில் சின்னையா தாவாச்சொத்தை காலி செய்து சென்று விட்டார் என்று சொல்லியுள்ள விவரம் தவறு என்றால் சரியல்ல. நானோ , எனது முன்னோர்களோ, என்னை சார்ந்த எனது வகையறாக்களோ வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் கிடையாது என்றாலும் 2,3 பிரதிவாதிகளின் முன்னோர்கள் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி ஊராட்சி மன்றத்தில் மனு கொடுத்தாக சொல்லியுள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்யாததால் மேற்படி விவரம் தவறானது என்றால் சரியல்ல.

7. வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த மனு விவரங்களுக்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மனுவில் வழக்கு சொத்தின் சர்வே எண் குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்றாலும் சர்வே எண் 135/11 க்கு மனு கொடுத்துள்ளேன் என்றால் வழக்கு சொத்திற்கு மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 1 ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் வீடு கட்டி முடித்து விட்டார் சரிதான்.

8. 1 ம் பிரதிவாதி கட்டிய வீட்டை காண்பிக்காமல் வழக்கு தாக்கல செய்துள்ளேன் என்றாலும் காலியிடம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் வீடு கட்டி , சொத்துவரி செலுத்தி வருகிறார் என்றாலும் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரிதான்.அவ்வபோது நான் அதனை எதிர்த்து

மனு தாக்கல் செய்துள்ளேன். மனு தாக்க்ல செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ததால் மனு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மனு கொடுத்துள்ளேன்.

9. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தாவாச் சொத்து உட்பிரிவு செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி பெயரிலும், 2,3 பிரதிவாதி பெயரிலும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் நாச்சான், கேசனுக்கு உட்பிரிவு செய்யப்பட்ட சொத்தாகும். நான் குறிப்பபிடும் நாச்சான் என்ற நபருக்கும், 2,3 பிரதிவாதிகளுக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. 1953 லிருந்து பிரிக்கப்பட்டுள்ளது. எனது பிராதில் எனது முன்னோர்களுக்கு இடையே வாய்கரால் பாகம் எந்த வருடம் நடைபெற்றது என்று சொல்லாததால் வாய்கரால் பாகம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ–5 ல் 1ம் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட பட்டாவை மறைத்து 2,3 பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டாவை மட்டும் தாக்கல் செய்துள்ளதால் உண்மைகளை மறைத்து வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. UDR காலத்தில் தான் பட்டா மாறியது. UDR காலத்தில் தான் பட்டா மாறியது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையில் பத்தி 30 ல் வழக்கு சொத்துக்கள் 135/11A ஆகவும், 135/11B ஆகவும் உட்பிரிவு செய்யப்பட்டு இரண்டு பகுதிகளுக்கும் நான்குமால் விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி நான்குமால் விவரம் தவறு என்று பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. வழக்கின் மொத்தி சொத்திற்கும் வடக்கே சர்வே எண் 135/10 பிரம்மன் சொத்து, கிழக்கு–சர்வே எண் 135/17A, 2B , சர்வே எண் 135/12, சர்வே எண் 135/14 உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கிழக்கு ராமன் புன்செய், மேற்கு இட்டரை . அவ்வாறு சொன்னால் தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சர்வே எண் 135/11 க்கு தெற்குமால் சர்வே எண் 307 உக்கிரையன் வீடு மற்றும் ஊர்குடியிருப்பு என்றால் சரிதான். மொத்த சொத்திற்கும் மேற்கு ஊரூணி என்றால் இட்டரைக்கு அடுத்து ஊரூணி உள்ளது. அவ்வாறு நான்குமால் இல்லை என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ–7 ல் காண்பிக்ககூடிய சொத்து விவரத்தில் வழக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். வழக்கில் உண்மை விவரங்களை சொல்லி வழக்கு தாக்கல்

செய்யவில்லை என்றாலும், வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்திற்கும், வழக்கு சொத்தும் வெவ்வேறு என்றாலும் வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13. 1ம் பிரதிவாதியின் கிரைய ஆவணத்தை இரத்து செய்ய கோரிய பரிகாரம்எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பட்டாவை இரத்து செய்ய கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வரும் நிலையில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும், எனது முன்னோர்களோ எந்த காலத்திலும், தாவாச்சொத்தை அனுபவிக்க இல்லை என்றாலும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் தாவாச் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.